செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600100

நாள் : 29.10.2024

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# தமிழகக் கலைகள் : தொன்மையும் தொடர்ச்சியும்

## பயிலரங்கம் – 15

(20.11.2024 – 29.11.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

**அன்புடையீர், வணக்கம்.**

தமிழக மக்களின் வாழ்வியல், சூழல், வழிபாடுகள், சடங்குகள், மரபுகள் போன்றவற்றின் பண்பாட்டுக் கூறாகவும் கூட்டுப் படைப்பாகவும் தமிழகக் கலைகள் வடிவம் பெற்றுள்ளன. தமிழர் பண்பாட்டைக் கற்கவும் அறிந்து கொள்ளவும் தமிழகக் கலைகள் பற்றிய புரிதல் மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில் தமிழகக் கலைகள் மரபு வழியாக நிகழ்த்தப்படுபவை, சமூக இயக்கத்தை உள்வாங்கி வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை. அதேபோல் காலத்திற்கேற்பப் புத்தாக்கம் பெற்றுப் புதிய புதிய வடிவங்களோடும் செல்வாக்கோடும் நிகழ்த்தப்பட்டு வருபவை. நமது பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் கலைகள் பற்றிய பதிவுகள் மிகுந்து காணப்படுகின்றன. பாணர், விறலியர், கூத்தர் போன்றோர் கலைஞர்களாக மட்டுமின்றி புலவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியங்கள் காட்டும் பல்வேறு கலைகள் இன்றும் அதே பெயரில் உயிர்ப்புடன் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். கலைகள் சடங்குசார் கலைகள், வழிபாடுசார் கலைகள், புராண இதிகாசங்கள்சார் கலைகள், வெற்றிக் கூத்துகள், பொழுதுபோக்குக் கலைகள், தொழில்முறைக் கலைகள் எனப் பல்வேறு வகைகளில் நிகழ்த்தப்படுகின்றன. காலவெள்ளத்தில் பல கலைகள் தேய்ந்தும் மறைந்தும் மாறியும் போயின. ஒரு இனத்தின் தொன்மையை, தனித்தன்மையை, வரலாற்றை அறிந்துகொள்ள பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான கலைகள் மிக முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன.

எனவே, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழர் வாய்மொழி மரபுகளைச் சேகரித்து ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் உன்னத பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இதன் ஒரு கூறாக, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம் வழியாகத் தமிழகக் கலைகளைச் சேகரித்துத் தொகுத்து ஆவணப்படுத்துவதும் களஞ்சியங்களாக வெளியிடுவதும் மீளாக்கம் செய்வதுமான பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தொடர்ச்சியாக, **“தமிழகக் கலைகள் : தொன்மையும் தொடர்ச்சியும்”** என்னும் பொருளில் பத்து நாள் பயிலரங்கை நடத்துகின்றது. இப்பயிலரங்கானது ஆய்வரங்கம், கலைகள் அரங்கேற்றம் மற்றும் கட்டுரை ஆக்கம் போன்ற தன்மைகளில் நடைபெற உள்ளது. ஒவ்வொரு நாளும் அரங்கேற்றப்படும் கலைகளைப் பற்றிப் பங்கேற்பாளர்கள் கட்டுரைகள் தயாரித்து ஒப்படைக்க வேண்டும். இத்தகைய முறைமைகளில் நடைபெறும் இப்பயிலங்கிற்கு நாட்டுப்புறவியலும் தமிழும் இணைந்த நிலையில் வாய்மொழி மரபுகள், வழக்காறுகள், கலைகள் போன்ற களங்களில்

ஆய்வுகளை மேற்கொள்ளும் / மேற்கொண்ட முனைவர் பட்ட ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

**இப்பயிலரங்கம் 20.11.2024 முதல் 29.11.2024 வரை 10 நாள்கள் நடைபெறவுள்ளது.**

## பயிலரங்கின் விதிமுறைகள், விவரங்கள்.

1. பயிலரங்கில் பங்குபெற அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை: 30.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **20.11.2024 முதல் 29.11.2024 வரை**
   நேரம்: காலை10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
3. பயிலரங்கக் கட்டணம் இல்லை.
4. நண்பகல் உணவு, தேநீர், பயணப்படி, நாட்படி செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படிப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும்.
5. பயிலரங்கில் பங்கேற்க ஆர்வமுள்ளோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
6. இணையவழி விண்ணப்பம் https://forms.gle/XqJfKi6jwfDqwjUHA என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகப் பெறலாம்.
7. விண்ணப்பம் வந்துசேர இறுதிநாள் : 13.11.2024
8. பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 14.11.2024 நாளன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
9. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளை அவசியம் கடைப்பிடித்தல் வேண்டும்.

**இயக்குநர்**